## ஆகஸ்ட் - 21

**"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்."**

**- மாற் 6 : 33**

ஆவிக்குரிய சிரத்தைகள் எப்பொழுதும் முதலில் கவனிக்கப்பட வேண்டும் என்கிற இந்த எண்ணத்தை கர்த்தருடைய ஜனங்கள் ஆவிக்குரிய இஸ்ரவேலர் தொடர்ந்து மனதில் வைத்திருப்பது நல்லது. ஆவிக்குரிய வளர்ச்சி, அபிவிருத்தி, செழுமை, தங்களுடைய பிள்ளைகள் மேலுள்ள தங்களுடைய மிகச்சிறந்த சிரத்தை, செல்வாக்கு ஆகிய இவைகளைக் கொண்டு, நம்முடைய நித்திய நலனுக்காக உலகசம்பந்தமான காரியங்கள் சமாளிக்கப்படவும் ஒழுங்குபடுத்தப்படவும் வேண்டும். தங்களையும் தங்களுடைய குடும்பங்களையும் பிரதிகூலமான தேவனற்ற ஜனங்களுடைய சுற்றுப்புறங்களுக்குள் வாழ எடுத்துச் செல்லும் எந்த யோசனையும் கடைப்பிடிக்கத் தயங்குவதோடல்லாமல், அப்படிப்பட்ட யோசனையை எந்த முகாந்திரத்திலும் கடைப்பிடிக்கமாட்டோமென்றும் அவர்கள் உறுதிகொள்ள வேண்டும். அதற்குமாறாக, இந்த ஜீவியத்தின் சுகங்களும், டாம்பிகமும் குறைவாக இருந்தாலும், கர்த்தருடைய ஜனங்கள் தங்களுடைய ஜனங்களாகவே இருக்க வேண்டும். **- Z '02, 350(R 3110)**

இந்த வாக்கியத்தில், நமது மிகச்சிறந்த முயற்சிகளுக்குத் தகுதியாக ஒரு உயர்வான நோக்கத்தை கிறிஸ்து நம்முன் வைக்கிறார். ஏனென்றால், இயேசு கிறிஸ்துவையும் இயேசுவோடு ராஜ்யத்தில் நித்திய ஜீவனை அடைவதைவிட எது அதிக விலைமதிப்புள்ளதாயிருக்கக் கூடும்? நமக்கு தேவையான எல்லா உதவிகளையும் கொடுக்கத் தன்னையே ஒரு ஆணையினாலே கட்டுப்படுத்தி, தேவன் தாமே, நம்மை அதற்கு அழைத்திருக்கிறதினாலும், நாம் அதை அடைவதில் வெற்றியடைய இயேசு தன்னுடைய பிரதான ஆசாரிய ஊழியத்தை செய்து வருகிறபடியாலும், நாம் பரிசுத்த ஆவியில் பங்கு கொள்ளுதல், நமக்கு எல்லா சக்தியையும் அளிக்கிறதினாலும், இந்த பிரமாண்டமான உயரிய நோக்கங்கள் நம்மை திகைக்கச் செய்ய அவசியமுமில்லை. இந்த மூன்று காரியங்களும், நாம் ஜெயங்கொள்ளுவதற்கு அவசியமாயிருக்கிற புறம்பான உள்ளான எல்லா உதவிகளையும் நமக்குக் கொடுக்கின்றன. இவைகளுக்குக் குறைவானது நம்மைத் தோற்றுப் போகச் செய்யும். **- P '30, 109.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**1இராஜா 3:13; மாற் 10:30; ரோம 8:32; 14:17,18; 2தீமோ 4:8; ரோம 12:19-21; 1கொரி 13; கலா 5:22-25; எபே 4:1-7, 12-16; 5:1,2; கொலோ 3:10-25.**

**கோபுர வாசிப்பு : Z '16, 69 (R 5862)**

**வினாக்கள் : இந்த வாரத்தின் எனது முக்கிய பேராவல் சுயநலம், பாவம், தப்பறை, உலகம் ஆகியவையா? அல்லது அன்பு, நீதி, ஞானம் - இராஜ்ய சிந்தனை ஆகியவையா? எனது முக்கிய பேராவல் தன்னை எவ்வாறு வெளிப்படுத்தியது? அது ஆதாயமாக அடைந்த பலன் என்ன?**